ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 10.3 – வேய் மருதோள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 10.3 – வேய் மருதோள்

‡ வேய் மரு தோள் இணை மெலியும் ஆலோ ! ⋆
மெலிவும் என் தனிமையும் யாதும் நோக்கா ⋆
கா மரு குயில்களும் கூவும் ஆலோ ! ⋆
கண மயில் அவை கலந்தாலும் ஆலோ ⋆
ஆ மருவின நிரை மேய்க்க நீ போக்கு ⋆
ஒரு பகல் ஆயிரம் ஊழி ஆலோ ⋆
தாமரைக் கண்கள் கொண்டீர்தி ஆலோ ! ⋆
தகவிலை தகவிலையே நீ கண்ணா ! ‖ **10.3.1** ‖

தகவிலை தகவிலையே நீ கண்ணா ! ⋆
தட முலை புணர் தொறும் புணர்ச்சிக்காராச் ⋆
சுக வெள்ளம் விசும்பிறந்தறிவை மூழ்க்கச் சூழ்ந்து ⋆
அது கனவென நீங்கி ஆங்கே ⋆
அக உயிர் அகம் அகம் தோறும் உள் புக்கு ⋆
ஆவியின் பரம் அல்ல வேட்கை அந்தோ ⋆
மிக மிக இனி உன்னைப் பிரிவை ஆமால் ⋆
வீவ நின் பசு நிரை மேய்க்கப் போக்கே ‖ **10.3.2** ‖

வீவ நின் பசு நிரை மேய்க்கப் போக்கு ⋆
வெவ்வுயிர் கொண்டெனதாவி வேமால் ⋆
யாவரும் துணை இல்லை யான் இருந்து ⋆
உன் அஞ்சன மேனியை ஆட்டம் காணேன் ⋆
போவதன்றொரு பகல் நீ அகன்றால் ⋆

பொரு கயல் கண் இணை நீரும் நில்லா ⋆
சாவதிவ்வாய்க் குலத்தாய்ச்சியோம் ஆய்ப் பிறந்த ⋆
இத்தொழுத்தையோம் தனிமை தானே ॥ **10.3.3** ॥

தொழுத்தையோம் தனிமையும் துணை பிரிந்தார் துயரமும் ⋆
நினைகிலை கோவிந்தா ⋆
நின் தொழுத்தனில் பசுக்களையே விரும்பித் ⋆
துறந்தெம்மை இட்டவை மேய்க்கப் போதி ⋆
பழுத்த நல் அமுதின் இன் சாற்று வெள்ளம் ⋆
பாவியேன் மனம் அகம் தோறும் உள் புக்கழுத்த ⋆
நின் செங்கனி வாயின் கள்வப் பணி மொழி ⋆
நினைதொறும் ஆவி வேமால் ॥ **10.3.4** ॥

பணி மொழி நினைதொறும் ஆவி வேமால் ⋆
பகல் நிரை மேய்க்கிய போய கண்ணா ! ⋆
பிணி அவிழ் மல்லிகை வாடை தூவப் ⋆
பெரு மத மாலையும் வந்தின்றாலோ ! ⋆
மணி மிகு மார்பினில் முல்லைப் போது ⋆
என் வன முலை கமழ்வித்துன் வாய் அமுதம் தந்து ⋆
அணி மிகு தாமரைக் கையை அந்தோ ! ⋆
அடிச்சியோம் தலை மிசை நீ அணியாய் ॥ **10.3.5** ॥

அடிச்சியோம் தலை மிசை நீ அணியாய் ⋆
ஆழியம் கண்ணா ! உன் கோலப் பாதம் ⋆
பிடித்தது நடு உனக்கரிவையரும் பலர் ⋆
அது நிற்க எம் பெண்மை ஆற்றோம் ⋆
வடித் தடம் கண் இணை நீரும் நில்லா ⋆
மனமும் நில்லா எமக்கது தந்நாலே ⋆

வெடிப்பு நின் பசு நிரை மேய்க்கப் போக்கு ⋆
வேம் எமதுயிர் அழல் மெழுகில் உக்கே ‖ **10.3.6** ‖

வேம் எமதுயிர் அழல் மெழுகில் உக்கு ⋆
வெள் வளை மேகலை கழன்று வீழ ⋆
தூமலர்க் கண் இணை முத்தம் சோரத் ⋆
துணை முலை பயந்தென தோள்கள் வாட ⋆
மா மணி வண்ணா ! உன் செங்கமல வண்ண ⋆
மென்மலர் அடி நோவ நீ போய் ⋆
ஆ மகிழ்ந்துகந்தவை மேய்க்கின்றுன்னோடு ⋆
அசுரர்கள் தலைப்பெய்யில் எவன் கொல் ஆங்கே ‖ **10.3.7** ‖

அசுரர்கள் தலைப்பெய்யில் எவன் கொல் ஆங்கென்று ⋆
ஆழும் என்னார் உயிர் ஆன் பின் போகேல் ⋆
கசிகையும் வேட்கையும் உள் கலந்து ⋆
கலவியும் நலியும் எங்கை கழியேல் ⋆
வசி செய் உன் தாமரைக் கண்ணும் வாயும் ⋆
கைகளும் பீதக உடையும் காட்டி ⋆
ஒசி செய் நுண் இடை இள ஆய்ச்சியர் ⋆
நீ உகக்கும் நல் அவரொடும் உழி தராயே ‖ **10.3.8** ‖

உகக்கு நல் அவரொடும் உழி தந்து ⋆
உந்தன் திரு உள்ளம் இடர் கெடும் தோறும் ⋆
நாங்கள் வியக்க இன்புறுதும் எம் பெண்மை ஆற்றோம் ⋆
எம் பெருமான் ! பசு மேய்க்கப் போகேல் ⋆
மிகப் பல அசுரர்கள் வேண்டுருவம் கொண்டு ⋆
நின்றுழி தருவர் கஞ்சன் ஏவ ⋆

அகப்படில் அவரொடும் நின்னொடாங்கே ⋆
அவத்தங்கள் விளையும் என் சொற்கொள் அந்தோ ! ॥ **10.3.9** ॥

அவத்தங்கள் விளையும் என் சொற்கொள் அந்தோ ! ⋆
அசுரர்கள் வன் கையர் கஞ்சன் ஏவ ⋆
தவத்தவர் மறுக நின்றுழி தருவர் ⋆
தனிமையும் பெரிதுனக்கிராமனையும் ⋆
உவர்த்தலை உடன் திரி கிலையும் என்றென்று ⋆
ஊடுற என்னுடை ஆவி வேமால் ⋆
திவத்திலும் பசு நிரை மேய்ப்புவத்தி ⋆
செங்கனி வாய் எங்கள் ஆயர் தேவே ! ॥ **10.3.10** ॥

‡ செங்கனி வாய் எங்கள் ஆயர் தேவு ⋆
அத்திருவடி திருவடி மேல் ⋆
பொருநல் சங்கணி துறைவன் வண் தென் குருகூர் ⋆
வண் சடகோபன் சொல் ஆயிரத்துள் ⋆
மங்கையர் ஆய்ச்சியர் ஆய்ந்த மாலை ⋆
அவனொடும் பிரிவதற்கிரங்கி ⋆
தையல் அங்கவன் பசு நிரை மேய்ப் பொழிப்பான் உரைத்தன ⋆
இவையும் பத்தவற்றின் சார்வே ॥ **10.3.11** ॥

அடிவரவு — வேய்தரு தகவிலை வீவநின் தொழுத்தை பணிமொழி
அடிச்சியோம் வேம் அசுரர்கள் உகக்கு அவத்தங்கள் செங்கனி சார்வே

வேய் மருதோள் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்